

வருடாந்த செயற்றிறன் அறிக்கை 2023

கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

2023 ம் வருடத்திற்கான வருடாந்த செயற்றிறன் அறிக்கை

கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்

செலவினத் தலைப்பு இலக்கம் 280

01 அத்தியாயம் - நிறுவன விபரம்/ செயற்படுத்தலின் சுருக்கம்

02 அத்தியாயம் - முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம

03 அத்தியாயம் - ஒட்டுமொத்த வருடாந்த நிதிச் செயற்பாடு

04 அத்தியாயம் - செயற்றிறன் குறிகாட்டிகள்

0 5அத்தியாயம் -நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்து கொள்வதற்கான செயற்றிறன்

0 6அத்தியாயம் -மனிதவள விபரம்

0 7அத்தியாயம் - இணக்கப்பாட்டு அறிக்கை

அத்தியாயம் 01 - நிறுவன விபரம்/ செயற்படுத்தலின் சுருக்கம்

1.1 அறிமுகம்

பொது முதலீட்டில் வளங்களை வினைத்திறனாகவும் உகந்ததாகவும் பயன்படுத்துவதை உறுதி செய்வதற்காக, பொது நிதி முகாமைத்துவத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட செலவு மற்றும் கால எல்லைக்குள் நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்படும் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களில் இருந்து விரும்பிய முடிவுகளை அடைவதற்கு விசேட கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். மேலும், ஒரு நல்ல முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு செயல்முறை மூலம், கருத்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களின் முன்னேற்றத்தை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தெரிவிக்க முடியும், அத்துடன் கருத்திட்டங்களை செயல்படுத்தும்போது எழும் தடைகள் மற்றும் சிக்கல்களைத் தீர்ப்பது குறித்து பகுத்தறிவு மற்றும் தகவலறிந்த முடிவுகளை எடுக்க முடியும். இம் முக்கிய நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக, குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் கருத்திட்டங்களை சுமூகமாக செயல்படுத்துவற்காக கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தினால் மேற்பார்வை, ஆலோசனை மற்றும் வசதிகள் வழங்கப்படுகின்றது.

மேலும், நாட்டின் அபிவிருத்தி மற்றும் நிலைத்தன்மையை பேணுவதற்கு பொருத்தமான சூழலை உருவாக்கக் கூடிய வகையில், தேசிய மதிப்பீட்டுக் கொள்கையை அரசதுறையில் செயல்படுத்துவதற்கான கட்டமைப்பை பிரபலப்படுத்துவதற்கு தேவையான வசதிகளை வழங்குவதுடன், பல்வேறு தரப்பினரால் மேற்கொள்ளப்படும் கோரிக்கைகளின் அடிப்படையில் கருத்திட்டங்களை மதிப்பிடுதல்களை மேற்கொள்ளுதல் மற்றும் அதன் மூலம் திட்டமிடல் செயல்முறைக்கான பரிந்துரைகளை வழங்குதல் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகிறது. கருத்திட்ட மதிப்பீடுகளினூடாக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் திட்டமிடல், நிதியீட்டம், கண்காணிப்பு மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றினை மேம்படுத்துவதற்கான செயல்ரீதியான உள்ளீடுகளை வழங்குகின்றன. அதனால் அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களின் செயற்றிறன்கள் மற்றும் விளைதிறன்களை மேம்படுத்துவதற்காக கடந்தகால அனுபவங்களினூடாக கற்றுக்கொண்ட பாடங்களை உறிஞ்சிக்கொள்வதற்காக, இறந்தகாலத்தில் நிகழ்ந்த பிரச்சினைகளை தவிர்த்துக்கொள்வதனூடாக எதிர்கால கருத்திட்டங்களை முறையாக திட்டமிடுவதற்காக சான்றுகளின் அடிப்படையிலான மதிப்பாய்வுகள் முக்கியமான அம்சமாகியுள்ளன.

1.2 நிறுவனத்தின் தூரநோக்கு பணிக்கூற்று மற்றும் குறிக்கொள்

தூரநோக்கு

அபிவிருத்தியின் செயற்றிறனை நோக்கி

பணிக்கூற்று

எதிர்பார்க்கப்படும் அபிவிருத்தி பெறுபேறுகளின் உருவாக்கங்களை உறுதிபடுத்துவதனூடாக அனைத்து அபிவிருத்தி கருத்திட்டங்களினதும் கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் செயற்படுத்தும் நிறுவனங்களுக்கு ஆலோசனைகளை வழங்குதல்.

குறிக்கோள்

வளங்களை உத்தம வகையில் பயன்படுத்துவதனூடாக ஒத்துக்கொள்ளப்பட்ட கால எல்லை மற்றும் செலவின மதிப்பீட்டிற்குள் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டங்களின் பெறுபேறுகளின் உருவாக்கத்தினை அதிகரித்தல்.

1.3 பிரதான தொழிற்பாடுகள்

1. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிதியீட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படும் அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் தகவல்களை சேகரித்தல், ஆய்வு செய்தல்மற்றும் கண்காணித்தல்.
2. பாரிய மற்றும் விசால அளவிலான கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றங்களை மீளாய்வு செய்து அமைச்சரவைக்கு அறிக்கையிடுதல்.
3. தேசிய செயற்பாட்டு மையத்தினூடாக பாரிய அளவிலான அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் பிரச்சினைகளை தீர்த்தல்.
4. வெளிநாட்டு நிதியீட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படும் அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்ற மீளாய்விற்காக அபிவிருத்திப் பங்காளர்களுக்கு வசதிகளை வழங்குதல்.
5. தெரிவு செய்யப்பட்ட வெளிநாட்டு நிதியுதவியுடனான கருத்திட்டங்களின் பெறுபேறுகளை அடைந்துகொள்வதன் முன்னேற்றத்தை உறுதிபடுத்துதல் மற்றும் நிதியுதவி வழங்கும் நிறுவனங்களுக்கு அக்கடன் தவணைகளை தீர்த்துக்கொள்ளக் கூடிய வகையில் கருத்திட்டங்களின் செயற்பாட்டு முன்னேற்றங்களை உறுதிப்படுத்துதல்.
6. தேசிய மதிப்பீட்டு கொள்கையை அமுல்படுத்துவதற்கு வசதி ஏற்படுத்திக் கொடுத்தல்.
7. பல்வேறு தரப்பினரதும் வேண்டுகோள்களுக்கமைய கருத்திட்டங்களை மதிப்பிடல் மற்றும் மதிப்பாய்வு மேற்கொள்ளுதல் மற்றும் அதனூடாக திட்டமிடல் செயற்பாடுகளுக்கு பரிந்துரைகளை வழங்குதல்.
8. கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்ற அறிக்கைகளை வெளியிடுவதன் மூலம் அபிவிருத்தி தகவல்களை பரப்புதல்.

1.4 நிறுவன கட்டமைப்பு (குறிக்கோள் - 1)

1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

07 தொழில்நுட்ப பிரிவுகள் மற்றும் 02 துணைப்பிரிவுகள் உள்ளடங்கிய கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களமானது, பணிப்பாளர் நாயகம் மற்றும் ஐந்து மேலதிக பணிப்பாளர் நாயகங்களின் நேரடி மேற்பார்வையின் கீழ் பின்வருமாறு கட்டமைக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப பிரிவு

i. கைத்தொழில் மற்றும் நிதி
ii. நீர் வழங்கல் மற்றும் மின்வலு
iii. விவசாயம் மறும் நீர்ப்பாசனம்
iv. கல்வி மற்றும் சுகாதாரம்
v. நகர பிராந்திய மற்றும் பிரதேச அபிவிருத்தி
vi. போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை
vii. அரச நிர்வாகம்

துணை பிரிவு

i. நிறுவன
ii. நிதி

அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் இலக்கு

2.1 அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களின் கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல்.

அபிவிருத்தி கருத்திட்டங்களின் கண்காணிப்பானது வருடம் முழுவதும் திணைக்களத்தினுள் செயற்படுத்தப்படும் ஒரு பிரதான செயற்பாடாவதுடன், அம் முன்னேற்றங்கள் தொடர்பாக கொள்கை ரீதியான தீர்மானங்களை அறியத்தருதல் காலாண்டு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அரச நிதி முகாமைத்துவம் சவாலான நிலைமையில் காணப்படும் சூழ்நிலையில் திரண்ட நிதியில் மற்றும் அரச நிறுவனங்களின் வருமானங்களின் ஊடாக முதலிடப்பட்ட நிதியினை அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களில் வினைதிறனான முறையில் பயன்படுத்துவதன் மூலம் மற்றும் தந்திரோபாய பிரவேசங்களை பின்பற்றுவதன் மூலம் எதிர்பார்க்கப்படும் பிரதிபலன்களை பொது மக்களுக்கு உரிய காலத்தில் வழங்கக்கூடிய வகையில் அபிவிருத்தி கருத்திட்டங்களின் கண்காணிப்பானது 2024ம் வருடத்தில் திணைக்களத்திற்கு சவாலாக காணப்பட்டது. அச் சவால்களுக்கு மத்தியிலும் திணைக்களத்தினால் 2024 வருடத்திற்குறிய முன்னேற்ற கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு அது தொடர்பான பரிந்துரைகளை உள்ளடக்கி இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது காலாண்டுகளுக்குறிய காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை தொகுத்து பரிந்துரைகளுடன் அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு முடிந்துள்ளது.

2023 ம் வருடத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியுதவிகளின் அடிப்படையில் வெவ்வேறு நிரல் அமைச்சுக்களின் கீழ் செயற்படுத்தப்படும் பாரிய மற்றும் பெரிய அளவிலான அபிவிருத்தி கருத்திட்டங்களின் எண்ணிக்கை 209 ஆகும். இக் கருத்திட்டங்கள் 22 அமைச்சுக்களின் செயற்படுத்தப்படுவதுடன், அவ் அமைச்சுக்களிடமிருந்து மாதாந்தம் கருத்திட்டங்களின் முன்னேற்ற தரவுகளை பெற்றுக்கொள்ளப்படுகின்றது. இப் பாரியளவிலான மற்றும் பெரியளவிலான கருத்திட்டங்களுக்கிடையில் 91 உள்நாட்டு நிதி மற்றும் கடன்கள் மூலமும் மற்றும் 118 கருத்திட்டங்கள் வெளிநாட்டு கடன் மற்றும் உதவிகள் மூலம் நிதியிடப்பட்டுள்ளன.

2023 ம் வருடத்தினுள் நிலவிய அந்நிய செலாவணி திரவத்தன்மை பற்றாக்குறை, இறக்குமதி கட்டுப்பாடுகள், மூலப்பொருள் விலை அதிகரித்தல், அபிவிருத்தி பங்காளர்கள் கடன் தவணையை விடுவித்தலை இடைநிறுத்தியிருத்தல் ஆகிய கருத்திட்டங்களை செயற்படுத்துவதில் பாதிப்பை ஏற்படுத்தும் பல்வேறு வரையறைகள் இருந்தபோதிலும், 2023ம் ஆண்டு நான்காவது காலாண்டு முடிவடையும் போது நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த 107 கருத்திட்டங்களில் 33 கருத்திட்டங்கள் மட்டுமே இறுதி கருத்திட்ட பெறுபேறுகளை உருவாக்குவதற்கு முடிந்துள்ளது. மேலும், செயற்றிறன் பிரச்சனைகள் காரணமாக 06 பாரியளவிலான கருத்திட்டங்கள் வருடத்தின் இறுதியாகும் போது இடைநிறுத்தப்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

அட்டவணை 2.1 : நிதியீட்டத்தின் அடிப்படையில் பாரியளவிலான கருத்திட்டங்களை வகைப்படுத்துதல் மற்றும் முன்னெற்றங்கள்

நிதி மூலம்	கருத்திட்டங்களின் எண்ணிக்கை	2023 ஒதுக்கீடு (ரூ.பில்.)	உண்மைச் செலவினம் (ரூ.பில்.)	நிதி முன்னேற்றம் (%)	கையிலுள்ள உறுதிச்சீட்டு (ரூ.பில்.)
உள்நாட்டு நிதி	86	157.3	102.5	65.2	6.9
உள்நாட்டு கடன்	05	7.9	0.9	11.4	2.3
வெளிநாட்டு கடன்	99	535.1	254.2	47.5	47.6
வெளிநாட்டு உதவி	19	15.9	3.7	23.3	0.1
மொத்தம்	**209**	**716.2**	**361.3**	**50.4**	**56.9**

ஒப்பந்தகாரர்களின் பலவீனமான செயற்றிறனின் காரணமாக முன்னேற்ற கண்காணிப்பு செயற்பாட்டின் போது இலகுவாக மற்றும் சரியான தரவுகளை சேகரிப்பதற்காக முன்மொழியப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி தகவல் அமைப்பினை (NDIS) புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதனூடாக புதுப்பிப்பதற்கான ஒப்பந்தம் இடை நடுவே நிறுத்தப்பட்டதனால் 2023ம் வருடத்தில் கருத்திட்ட மீளாய்வு, அறிக்கையிடல், ஒருங்கிணைத்தல் மற்றும் செயற்படுத்தலின் போது ஏற்படும் பிரச்சினைகள் உரிய தரப்பினரை சம்பந்தப்படுத்தி தீர்த்து வைப்பதற்காக விஷேட முயற்சிகளை எடுப்பதற்கு நேரிட்டது. இந்நிலைமைகளை தவிர்த்துக்கொள்வதற்காக தேசிய ஒருங்கிணைந்த அபிவிருத்தி தகவல் அமைப்பை (INDIS) உலக வங்கி உதவியின் கீழ் மீண்டும் நவீனமயப்படுத்துவதற்கான சாத்தியப்பாடு தொடர்பாக உரிய தரப்பினருடன் 2023 வருடத்தில் கலந்துரையாடப்பட்டது.

வருடம் முழுவதும் மேற்கொள்ளப்படும் முன்னேற்ற மீளாய்வு செயற்பாடுகளின் போது இனங்காணப்பட்ட சில கருத்திட்டங்களில் காணப்பட்ட பிரச்சினைகளை தீர்ப்பதற்காக விஷேட அவதானத்தை செலுத்த வேண்டியுள்ளது. அதனால் கருத்திட்டங்களின் உண்மை நிலைமைகளை வெளிப்படுத்துவதற்காக நிரல் அமைச்சுக்களின் ஊடாக வழங்கப்படும் மாதாந்த மற்றும் காலாண்டு அறிக்கை மற்றும் அக்கறையுடைய தரப்பினருடன் கருத்திட்ட செயற்றிறன் கூட்டங்கள் மட்டும் போதுமானதாக இல்லாததுடன், சில கருத்திட்டங்களில் காணப்படும் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக விஷேட அவதானத்தை செலுத்தி விஷேட கள விஜயங்களை மேற்கொள்தலின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் அவதானிப்புக்கள் மிகவும் முக்கியமானதாகும். அதற்கமைய, இத்திணைக்களத்தினால் ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும் ஒவ்வொரு துறையின் கீழ் கள விஜய திட்டம் தயாரிக்கப்படுகின்றது. 2023 வருடத்தில் மூலதன பாய்ச்சல் பொது மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதை நோக்கமாகக் கொண்டு மீண்டுவரும் செலவினங்களுக்கு பதிலாக பயன்படுத்த நேரிட்டமை போன்றே நாட்டில் நிலவிய பொருளாதார பணவீக்கத்தின் காரணமாக எரிபொருள் விலை வேகமாக அதிகரித்ததனால் ஏற்பட்ட போக்குவரத்து செலவு அதிகரித்ததனால் ஏற்பட்ட இடையூறுகளுக்கு மத்தியிலும் அவ் வருடத்திற்கு இலக்கிடப்பட்ட 151 கள விஜயங்களுக்கிடையில் அனைத்து பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் சிக்கலான கருத்திட்டங்கள் தொடர்பான 14 கள விஜயங்களினூடாக 23 கருத்திட்டங்கள், அவதானிக்கப்பட்டதுடன் அக்கள அவதானிப்புக்கள் அறிக்கைகள் மற்றும் தரவுகளுக்கமைய அபிவிருத்தி கருத்திட்டங்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக திணைக்களத்தினால் விஷேட பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

காலாண்டு முன்னேற்ற அறிக்கை ஆய்வினூடாக இனங்காணப்பட்ட மிகவும் கவனமெடுக்கப்பட்ட கருத்திட்டங்கள் அதிகமாக அறிக்கையிடப்பட்டிருந்த நிரல் அமைச்சுக்கள் 08இன் கீழ் செயற்படுத்தப்படும் பாரியளவிலான அபிவிருத்திகளில் காணப்படும் பிரச்சினைகளை தீர்ப்பதனூடாக அவற்றின் சுமூகமான செயற்பாடுகளுக்காக வசதிகளை வழங்குவதற்கு கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தினால் உரிய நிரல் அமைச்சுக்களின் உத்தியோகத்தர்களுடன் முன்னேற்ற ஆய்வு கூட்டத்தொடர்கள் 2023ம் வருடத்தில் நடாத்தப்பட்டது. அங்கு ஒவ்வொரு கருத்திட்டங்களிலும் காணப்படும் பிரச்சினைகள் உள்ளடங்கிய அறிக்கையொன்று சமர்ப்பிக்கபடுவதாக உரிய அமைச்சுக்களுக்கு தெரிவிக்கப்பட்டதுடன் திணைக்கள மட்டத்தில் தீர்த்துக்கொள்ள முடியாத பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதற்காக தேசிய செயற்பாட்டு அறையினூடாக தேவையான வசதிகளை வழங்குதல் இத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

2.2 களை கண்காணிப்புக்கள் / Replace

1. கல்வி மற்றும் சுகாதார பிரிவு





தொழில்நுட்ப விடய திறன் தொடர்பாக தேசிய கல்வி கலாசாலையை ஸ்தாபித்தல்

2. போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை பிரிவு



ரயில் போக்குவரத்து செயற்றிறனை அதிகரிக்கும் கருத்திட்டம் - மாலபல்ல வீடமைப்புத்திட்டம்



ரயில் போக்குவரத்து செயற்றிறனை அதிகரிக்கும் கருத்திட்டம் - தும்ரிய டெலிகொம் அமைப்பினை ஸ்தாபித்தல்



பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் இறக்குமதி பொருட்களை செயற்படுத்தும் சாதன கட்டிடத்தினை நிர்மாணித்தல் - கட்டம் 1



ஜெயா கொள்கலன் முனையத்தில் பெர்த் திறனை மேம்படுத்துதல் - கட்டம் V கருத்திட்டம்

3. நீர் வழங்கல் மற்றும் மின்சக்தி பிரிவு



கட்டுநாயக்க பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்தின் எரிபொருள் நிரப்புதல் முனையம் அபிவிருத்தி செய்வதற்கான கருத்திட்டம்.



யாழ்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார கருத்திட்டம்.

4. விவசாய மற்றும் நீர்பாசன பிரிவு





மகாவெலி நீர் பாதுகாப்பு முதலீட்டு கருத்திட்டம்

5. நகர பிரதேச மற்றும் பிராந்திய அபிவிருத்தி பிரிவு





அநுராதபுர ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தி கருத்திட்டம்




விஷேட தாய்மார் மற்றும் சிறுவர் வைத்தியசாலை, களுத்துறை.

2.3 விஷேட கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்துதல்

நிரல் அமைச்சுக்களின் உத்தியோகத்தர்கள், கருத்திட்ட பணிப்பாளர்கள், ஒப்பந்தகாரர்கள், அபிவிருத்தி தரப்பினர் மற்றும் நிதி அமைச்சின் ஏனைய திணைக்களத்தின் பிரதிநிதிகளின் பங்குபற்றலினூடாக, புதிய நிதி பாய்ச்சல்கள், கட்டமைப்பு காரணிகள், விரிவான அபிவிருத்தி மாற்று முன்மொழிவுகள் மற்றும் புதிய கருத்திட்ட நுழைவுகளில் நிலவும் கருத்திட்ட பிரச்சினைகளை ஆய்வு செய்வதற்காக மற்றும் கருத்திட்டங்களை விரைவுபடுத்துவதனூடாக அரச முதலீடுகளில் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் உரிய காலத்தில் உருவாக்கப்படுதல் உறுதிப்படுத்திக்கொள்ளும் நோக்கில் திணைக்களத்தினால் விஷேட கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. மேலும், இத்திணைக்களத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட விஷேட கூட்டத் தொடர்கள் நடாத்தப்பட்டதுடன் போக்குவரத்து சிரமங்களினால் கூட்டங்களுக்கான பங்குபற்றல்கள் சிக்கலாக காணப்படும் சந்தர்ப்பங்களில் உரிய தரப்பினர்கள் நிகழ்நிலை முறைமையினூடாக பங்கேற்கச் வைக்கப்பட்டது.

அட்டவணை 2.2: முன்னேற்றங்களை கள விஜயத்தினூடாக கண்காணித்தல்
(2023.01.01 இலிருந்து 2023.12.31 திகதி வரை)

துறை/ களம்	கள கண்காணிப்புக்காக திட்டமிடப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை	கள கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை	தொடர்புடைய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்ட கண்காணிப்பு அறிக்கைகளின் எண்ணிக்கை
நீர் வழங்கல் மற்றும் மின்சாரம்	14	1	1
விவசாயம் மற்றும் நீர்ப்பாசனம்	26	4	4
கல்வி மற்றும் சுகாதாரம்	54	6	5
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள்	22	8	8
பிராந்திய, மாகாண அபிவிருத்தி மற்றும் பொ நிர்வாகம்	17	3	2
நிதி மற்றும் தொழில்	18	1	-
மொத்தத் தொகை	**151**	**23**	**20**

அபிவிருத்தி கருத்திட்டங்களை ஆரம்பிப்பதன் ஆரம்ப செயற்பாடுகள், காணிகளை சுவீகரித்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்துதல், பெறுகை செயற்பாடுகளை விரைவுபடுத்துதல் மற்றும் நிறுவன உள்ளக பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகளை முறைமைப்படுத்துவதற்கு மற்றும் வினைத்திறன்மிக்க வகையில் மேற்கொள்வதற்கு தேவையான கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதன் மூலம் தொடர்ச்சியாக வசதிகளை வழங்குவதற்காக, இத்திணைக்களத்தின் ஊடாக விஷேட கலந்துரையாடல்கள் மற்றும் கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், ஏனைய நிறுவனங்களுடாக நடாத்தப்படும் அபிவிருத்தி கருத்திட்டங்கள் தொடர்பான கூட்டங்கள், கலச்துரையாடல்களுக்காக திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர்.

அட்டவணை 2.3 : கலந்துரையாடல் மற்றும் விஷேட கூட்டங்களை நடத்துதலின் முன்னேற்றம்
(2023.01.01 இலிருந்து 2023.12.31 திகதி வரை)

கூட்டங்கள்/ கலந்துரையாடல்களை வகைப்படுத்துதல்	எண்ணிக்கை
கருத்திட்ட பிரச்சினைகள் தொடர்பாக நிரல் அமைச்சுக்கள், கருத்திட்ட முகாமைத்துவம் அலகுகள் மற்றும் இத் திணைக்களத்துடன் நடாத்தப்பட்ட விஷேட கூட்டங்கள்	23
தேசிய செயற்பாட்டு மைய (NOR) கூட்டங்கள்	26
உதவி வழங்குனரின் மீளாய்வு கூட்டங்கள்	02
முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள்	15
துறைசார் கூட்டங்கள்	14
அபிவிருத்தி தரப்பினருடனான கூட்டங்கள்	28
கருத்திட்ட கண்காணிப்பு குழு/ கருத்திட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டங்கள்	38
வேறு விஷேட கூட்டங்கள்/ கலந்துரையாடல்கள்	39
மொத்தம்	**185**

அவ்வாறே, சில பாரிய அளவிலான அபிவிருத்தி கருத்திட்டங்கள் கால நீடிப்பினை பெற்றுக்கொண்டிருந்தாலும் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைந்துகொள்ள முடியாமற் போகின்ற சந்தர்ப்பங்கள் காணப்படுவதனால் ஏற்படுகின்ற பிரச்சினைகளை தீர்த்துகொள்வது தொடர்பாக தந்திரோபாய தீர்மானமெடுப்பதற்கு மற்றும் விரைவாக பதிலளிக்கக் கூடிய நிலையான முறைமையின் அவசியம் அவதானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, 2022.12.05 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய தேசிய செயற்பாட்டு மையமொன்று (NOR) கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ளது. இதன் கீழ் பிரதம மந்திரியின் செயலாளரின் தலைமைத்துவம் உள்ளடங்களாக 11 சிரேஷ்ட உத்தியோகத்தர்களை கொண்ட குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் தேசிய செயற்பாட்டு மையத்திற்கு சமர்ப்பிக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பாக அக் குழுவினால் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அதே போன்று 2022.09.05 ம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் நியமிக்கப்பட்ட பாரியளவிலான அபிவிருத்தி கருத்திட்டங்களை மீண்டும் மூலோபாயப்படுத்தல் மற்றும் விரைவுபடுத்தும் உத்தியோகத்தர் குழவின் பணிக்கடமைகள் இத் தேசிய செயற்பாட்டு மையத்தின் ஊடாக செயற்படுத்தப்படுகின்றன.

குழுவின் பணி அளவுகோல்கள் பின்வருமாறாகும்.

1. அனைத்து அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் பிரச்சினைகள் தொடர்பாக தந்திரோபாய தீர்மானமெடுத்தல், விரைவாக பதிலளித்தல் மற்றும் உரிய தரப்பினருக்கு பரிந்துரைகளை வழங்குதல்.

2. அமைச்சரவை தீர்மானத்தின் ஊடாக இக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும் கட்டளைகள் தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுத்தல் மற்றும் பரிந்துரைகள் மற்றும் முன்மொழிவுகளை சமர்ப்பித்தல்.

3. "பாரியளவிலான அபிவிருத்தி கருத்திட்டங்களை மீள மூலோபாயப்படுத்தல் மற்றும் விரைவுபடுத்தும் (RAMP) குழு" ஊடாக பெற்றுக்கொடுக்கப்படும் தீர்மானங்களை செயற்படுத்தும் முன்னேற்றங்களின் பின்னூட்டல்களை பெறல்.

4. அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்குறிய ஒப்பந்தகாரர்கள், அபிவிருத்தி பங்காளர்கள், நிபுணர்கள் மற்றும் வெளிநாட்டு தூதரங்கள் மற்றும் உத்தியோகபூர்வ பிரதிநிதிகள் உட்பட மூன்றாம் தரப்பினரை அழைத்து விவாதித்தல்.

2023 வருடத்தினுள் தேசிய செயற்பாட்டு மைய கூட்டங்கள் 26 நடாத்தப்பட்டுள்ளதுடன் அதனூடாக 19 நிரல் அமைச்சுக்களின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற 138 பல்வேறுபட்ட கருத்திட்டங்களுக்குறிய உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் மீளாய்வு செய்யப்பட்டது. இவ் 26 கூட்டங்களினுள் RAMP குழுவின் தீர்மானங்களை பின்னூட்டம் செய்வதற்காக 06 கருத்திட்டங்கள், திறைசேரி திணைக்களங்களின் வேண்டுகோள்களின் அடிப்படையில் 07 கருத்திட்டங்கள், அமைச்சரவை தீர்மானத்திற்குறிய பரிந்துரைகளை வழங்குதல் 14 மற்றும் 04 கருத்திட்டமல்லா பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டு தீர்மானமெடுக்கப்பட்டன. குழுவின் தலையீடு மற்றும் வழங்கப்பட்ட தீர்வுகள் செயற்படுத்தப்படுவதன் முன்னேற்றங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.4 : NOR குழுவின் தலையீடுகள் மற்றும் வழங்கப்பட்ட தீர்மானங்கள் செயற்படுத்தப்படுவதன் முன்னேற்றங்கள் (2023.01.01 இலிருந்து 2023.12.31 திகதி வரை)

பிரச்சினைகளை வகைப்படுத்தல்	கருத்திட்ட எண்ணிக்கை
உள்நாட்டு/வெளிநாட்டு நிதியினை விடுவித்தல்	14
கடன் ஒப்பந்தங்கள்/ கருத்திட்டங்களுக்கு கால நீடிப்பினை பெற்றுக்கொள்ளுதல்	34
செலவு மதிப்பீட்டு திருத்தம்	01
ஒப்பந்த முகாமைத்துவம்	08
கருத்திட்ட ஆளணியினர்	32
காணிகளை சுவீகரித்துக்கொள்ளல்	03
பங்குதாரர்களிடையே ஒருங்கிணைப்பு	04
கருத்திட்ட செலவுகளை திறம்பட பயன்படுத்துதல்	07
கருத்திட்டங்களின் நேரத்திற்கு ஏற்ப நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளித்தல்	14
நெருக்கடி வாய்ந்த பொருளாதார நிலைமையினுள் கருத்திட்ட செயற்பாடுகளை பாதுகாப்பாக பொதுமக்களுக்கு பிரதிபலன்கள் கிடைக்கக்கூடிய வகையில் நிறைவுறுத்துதல்.	08
நிறைவு செய்யப்பட்ட கருத்திட்டங்களின் உரிமைத்துவம் பற்றிய பிரச்சினைகள்	10

2.4 அபிவிருத்தி பங்காளர்களுக்கு வசதிகளை வழங்குதல்

கருத்திட்டங்களை விரைவுபடுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தி பிரதிபலன்களை உரிய காலத்தில் அடைந்துகொள்வதனை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக அபிவிருத்திப் பங்காளர்களுடன் வருடாந்தம் நடாத்தப்படும் மீளாய்வு செயற்பாட்டின் மூலம் அபிவிருத்தி கருத்திட்டங்களை செயற்படுத்தும் போது அபிவிருத்தி பங்காளர்களின் வசதிகளை வழங்குபவரின் பணியும் இத் திணைக்களத்தின் வருடாந்த நிகழ்ச்சித்திட்டத்தினுள் காணப்படும் இன்னுமொரு பிரதான அம்சமாகும்.

அதற்கமைய, 2023 வருடத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) மற்றும் ஐரோப்பிய சங்கத்தின் (EU) உதவிகளின் அடிப்படையில் செயற்படுத்தப்படும் 32 கருத்திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு நடத்தப்பட்டது. அதனூடாக கருத்திட்டங்களில் காணப்படும் சவாலான பிரச்சினைகளை உரிய அதிகாரிகளின் கவனத்திற்குற்படுத்துவதனூடாக வினைதிறன் மிக்க கருத்திட்ட முகாமைத்துவத்திற்கு பங்களித்துள்ளது. தற்காலத்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினால் ஏற்பட்ட சிக்கலான பிரச்சினைகளினால் திட்டமிடப்பட்ட வகையில் ஏனைய அபிவிருத்தி தரப்பினருடன் அபிவிருத்தி கருத்திட்டங்களின் மீளாய்வுகளை நடாத்துவதற்கு முடியாமற் போனது.

2.5 தேசிய மதிப்பீட்டு கொள்கையினை செயற்படுத்தும் கட்டமைப்பை தயாரிக்கும் முன்னேற்றங்கள்

2019ம் வருடத்தில் இத்திணைக்களத்தினால் பல்வேறு நிறுவனங்களை பிரதிநிதிதுவப்படுத்தும் உயர் அரச உத்தியோகத்தர்களின் தலையீட்டினுள் மதிப்பீட்டு கொள்கையை தயாரிப்பது தொடர்பான தேசிய செயற்பாட்டு குழுவொன்றினை நியமித்து அதன் வழிகாட்டுதல்கள் மற்றும் உதவிகளின் அடிப்படையில் தேசிய மதிப்பீட்டு கொள்கையினை தயாரித்து கௌரவ அமைச்சரின் தலைமைத்துவத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

அவ்வாறு வெளியிடப்பட்ட தேசிய மதிப்பீட்டு கொள்கையினை செயற்படுத்துவதற்காக தேவையான வழிகாட்டுதல்கள், நியமங்கள், மதிப்பீட்டு நெறிமுறைகள், நிறுவன கட்டமைப்புக்கள், மதிப்பீட்டு நிகழ்ச்சி நிரல், முறைமையான தந்திரோபாய பிரவேசங்கள் உள்ளடக்கப்பட்ட தேசிய மதிப்பீட்டு கொள்கையை செயற்படுத்தும் கட்டமைப்பு மும் மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு 2023 செப்டம்பர் 08 ம் திகதி அதிமேதகு ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ் உத்தியோகபூர்வமாக வெளியிட்டு வைக்கப்பட்டது.

அரச துறையினுள் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை மதிப்பிடும் செயற்பாடுகளை நிறுவனமயப்படுத்துவதற்காக கருத்திட்டங்களை திட்டமிடல், கண்காணித்தல் மற்றும் நிதி முகாமைத்துவம் தொடர்பான உத்தியோகத்தர்கள் இம் மதிப்பீட்டு விடயம் தொடர்பாக போதுமான அறிவை பெற்றுக்கொடுக்க வேண்டும். இத் தேவையினை பூர்த்தி செய்து கொள்வதற்காக, அரச துறையில் மதிப்பீட்டினை பிரதான பாய்ச்சலாக கொண்டுவருவதன் ஆரம்ப படிமுறையாக தகுதியுடைய உத்தியோகத்தர்களுக்கிடையில் மதிப்பீடு தொடர்பான அறிவினை விரிபடுத்துவதற்காக கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தினூடாக 2023 வருடத்தில் பயிற்றுப்பாளர்களை பயிற்றுவித்தல் மற்றும் மதிப்பீடு தொடர்பாக அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்ட தொடர் நாட்டின் அனைத்து மாகாணங்களும் உள்ளடங்கும் வகையில் நடாத்தப்பட்டது.

அட்டவணை 2.5 : பயிற்சியாளர்கள் பயிற்சி மற்றும் பொது விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் (2023.01.01 முதல் 2023.12.31 திகதி வரை)

	நிகழ்ச்சிகளில் எண்ணிக்கை	கலந்து கொண்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை
பயிற்சியாளர்கள் பயிற்சி நிகழ்ச்சிகள்	4	92
பொது விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்	9	391

நிரல் அமைச்சுக்களுக்காக நிறுவன மற்றும் நிறுவனங்களுக்கு இடையேயான பெறுபேற்றுக் கட்டமைப்பை உருவாக்குதல்

நிரல் அமைச்சுக்களின் படிநிலையுடன் பொறுப்புடன் காணப்படுவதை உறுதிபடுத்தக் கூடிய வகையில் அபிவிருத்தி முதலீடுகளின் பிரதான செயற்றிறன் குறிகாட்டிகளை (KPI) உள்ளடக்கி அமைச்சரவையின் கட்டளைகளுக்கமைய வருடாந்தம் நிரல் அமைச்சுக்களின் செயற்றிறன்களை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக அமைச்சு பெறுபேற்றுக் கட்டமைப்பை (Organizational Result Frame Work) தயாரிக்கும் செயற்பாடுகள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆலோசனையாளரின் உதவியுடன் 2023 வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டன. அதற்கமைய, நிபுணர்களின் அறிவு மற்றும் ஆலோசகர்களின் வழிகாட்டுதலுடன் 25 நிரல் அமைச்சுக்களுக்காக பெறுபேற்று கட்டமைப்பை அறிமுகப்படுத்துவதற்கான அமர்வுகள் கடந்த ஆண்டில் நடத்தப்பட்டுள்ளன. அவ் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி, அதிக செலவுடைய ஒன்பது நிரல் அமைச்சகங்களுக்கான பெறுபேற்று கட்டமைப்பை தயாரிப்பதில் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது. நிரல் அமைச்சுக்களினால் அடைந்துகொள்வதற்கு ஒத்துக்கொள்ளப்பட்ட பெறுபேற்று கட்டமைப்புடன் செயற்றிறன் குறிகாட்டிகள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட உள்ளன.

2.6 அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றங்களை பிரசுரித்தல்.

அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களின் செயலாற்றுகை பற்றிய முன்னேற்ற அறிக்கைகள் இத்திணைக்களத்தின் பரிந்துரைகளுடன் அமைச்சரவைக்கு காலாண்டு அடிப்படையில் சமர்ப்பிக்கப்படுகின்றது. அதனுடன் அமைச்சரவையினால் வழங்கப்பட்ட தீர்மானங்களுடன் அனைத்து காலாண்டு முடிவடையும் போதும் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு நிரல் அமைச்சுக்களின் கீழ் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்கள் பற்றி இத்திணைக்களத்தின் மதிப்பீடு மற்றும் பரிந்துரைகளை தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரச செலவினம் மற்றும் வளங்களின் செயற்றிறன் வினைதிறன் மிக்க பயன்பாடு பற்றிய தகவல்களை பொது மக்களுக்கு, சிவில் அமைப்புக்களுக்கு மற்றும் ஏனைய அக்கறையுடைய தரப்பினருக்கு இலகுவாக பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் உரிய முன்னெற்ற அறிக்கைகள் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் இணையத்தளத்தில் (www.treasury.gov.lk) வெளியிடப்பட்டுள்ளன.


அத்தியாயம் 3– வருடத்தின் மொத்த நிதி செயற்றிறன்

3.1 பாதீட்டு தகவல்

2023 ஆம் ஆண்டுக்கான அனுமதி வழங்கப்பட்ட செலவு மதிப்பீடு மற்றும் 2023 வருடத்திற்கான செலவினம் வரைபு இலக்கம் 01 மற்றும் அட்டவணை 3.1 இனூடாக காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை இல 3.1:பாதீட்டு தகவல் (2021.12.31 திகதியில்) மூலதனம் மற்றும் மீண்டு வரும் செலவினம் - (ரூபா.மில்)		
வகை	**மதிப்பிடப்பட்ட செலவினம்**	**உண்மையான செலவினம்**
மீண்டுவரும் செலவினம்	101.76	82.10
மூலதன செலவினம்	-	-
மொத்தம்	101.76	82.10

வரைபு இல 3.1 : பாதீட்டு தகவல் - 2023.12.31 திகதியில்



3.2 வருடத்தின் திரண்ட நிதி செயற்றிறன்



3.3 நிதி நிலைமை கூற்று



K.M.M. Siriwardana
Secretary to the Treasury and
Secretary to the Ministry of
Economic Stabilization and National Policies
The Secretariat
Colombo 01.

Ayanthi De Silva
Director General

K. Piratheepan
Director
Department of Project Management & Monitoring
General Treasury
Colombo 01


3.4 காசுப் பாய்ச்சல் கூற்று



2023 மார்ச் 31 இல் உள்ளவாறான
காசுப் பாய்ச்சல் கூற்று

	2023	
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டங்களின் மற்றும் உத்தரவுப் பத்திரங்களின் இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய வருமான நிலைப்படுத்தலாக கொடுக்கப்பட்ட வருமானம்	3,979,158	3,774,813
கிடைக்கப்பெற்ற கட்டுமதி	79,148,189	91,801,288
முற்பணங்களின் அதிகரிப்பு	2,864,229	6,763,948
வைப்புக்களின் பெறுகை	720,446	58,240
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தப் காசு (அ)	86,214,833	102,397,949
வரி பணிப்புரிக்கப்பட்ட காசு		
ஆளுகைப்பு வேலையாள் மற்றும் தொழிற்படை செலுத்தலைகள்	81,983,381	82,137,438
வாடிக்கையாளர் பாதுகாப்பு கொடுப்பனவுகளுக்கு	327,870	394,142
வரையப் செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	-	1,941,091
நிலைநிர்த்தத் திருப்பப்பட்ட பணிமுற்பணம்	846,979	12,532,074
முற்பணச் செலுத்துகை	2,813,244	5,118,751
வரையறுத் செலுத்துகை	726,446	58,240
தொழிற்பாடுகளுக்கு பணிமுற்பணப்பட்ட மொத்தக் காசு (ஆ)	86,214,833	102,397,519
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான நிதிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	(0)	199,430
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழப்பு ஏற்பாடுகள் மற்றும் பொருத்த செயற்பாடுகளின் விற்பனை	-	-
உரிய வட்டிகள் மீதான வருமானம்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (உ)	-	-
கடன் பணிப்புரிக்கப்பட்ட காசு		
கொள்வனவு அல்லது பொதுவாக பொருட்களின் திரும்பளிப்பு மற்றும் ஏனைய முதலீட்டுகளின் கொள்வனவு	-	(197,000)
முதலீட்டுக்கு செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (ஊ)	-	(197,000)
	-	(197,000)
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான நேரிய காசுப் பாய்ச்சல் (இ)=(உ)-(ஊ)		
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான நேரிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(எ)	(0)	(0)
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உரிமைப் பங்கு வெளியீடு	-	-
கொடுப்பனவு பங்குகள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதிச் நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
கடன் பணிப்புரிக்கப்பட்ட காசு		
உரிமை வட்டிகள் மீதான மிகை செலுத்தலைகள்	-	-
வெளிநாட்டுக் வட்டிகள் மீதான மிகை செலுத்தலைகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பணிமுற்பணப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான நேரிய காசுப் பாய்ச்சல் (ஏ)=(எ)-(ஐ)	-	-
காசில் ஏற்பட்ட நேரிய அளவு (இ)=(அ)+(ஏ)	-	-
நிதியாண்டு 01 ஆம் திகதியிலிருந்தான ஆரம்ப காசு மிகு	-	-
மார்ச் 31ஆம் திகதியிலான இறுதிக் காசு மிகு	-	-

3.5 நிதி கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்



3.6 வருமான சேகரிப்பு செயலாற்றுகை.

இத்திணைக்களம் வருவாய் சேகரிக்கும் திணைக்களம் அல்ல.

அட்டவணை இல. 3.2: வருமான சேகரிப்பு செயலாற்றுகை

ரூபா. '000

வருமான குறியீடு	வருமான குறியீடு விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		அசல் மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூ)	இறுதி வருமான மதிப்பீட்டின் சதவீதமாக%
இத்திணைக்களம் வருவாய் சேகரிக்கும் திணைக்களம் அல்ல.					

3.7 ප්‍රතිපාදන උපයෝජන කිරීමේ කාර්ය සාධනය

அட்டவணை இல 3.3: ஒதுக்கீட்டு பயன்பாட்டின் செயலாற்றுகை

ரூபா. '000

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கிடப்பட்ட நிதி		உண்மையான செலவினம்	பயன்பாடு,இறுதி ஒதுக்கீட்டின் % ஆக
	அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
மீண்டவரும்	101,760,000	101,760,000	82,103,670	81
மூலதன	-	-	-	-

3.8 நி.பி. குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடு

அட்டவணை இல. 3.4: ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடு

ரூ. '000

தொடர் இல.	நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்ட அமைச்சு/ திணைக்களம்	ஒதுக்கீட்டின் நோக்கம்	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக வழங்கப்பட்ட ஒதுக்கீட்டுப் பயன்பாடு
			அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
01	-	-	-	-	-	-

3.9 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை

அட்டவணை இல. 3.5 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை ரூ. '000					
ஆதன குறியீடு	**குறியீட்டு விபரம்**	**31.12.2022 திகதிக்கு சொத்து மீளாய்வு அறிக்கைக்கமைய மீதி**	**31.12.2022 திகதியில் நிதி நிலைமை அறிக்கையின்படி மீதி**	**எதிர்காலத்தில் கணக்கிட வேண்டியது**	**அறிக்கையிடல் முன்னேற்றம் %**
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்பு	-	-	-	
9152	இயந்திரம் மற்றும் உபகரணம்	64,604,642.34	64,604,642.34	-	100%
9153	காணி	-	-	-	
9154	அருவச் சொத்துக்கள்	-	-	-	
9155	உயிரியல் சொத்துக்கள்	-	-	-	
9160	குறை வேலைகள்	-	-	-	
9180	குத்தகைச் சொத்துக்கள்	-	-	-	

3.10 கணக்காய்வாளர் அறிக்கை

** ** பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கும் போது, கணக்காய்வாளரினால் வெளியிடப்பட்ட இறுதி கணக்காய்வு அறிக்கையானது ஸ்கேன் செய்யப்பட்டு (SCAN) இங்கே சேர்க்கப்பட்டுள்ளதுடன் அதன் அச்சிடப்பட்ட பிரதியானது இணைப்பு 02 ஆக உள்ளடக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் 04 - செயலாற்றுகை குறிகாட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகை குறிகாட்டிகள் (செயற்பாட்டுத் திட்ட அடிப்படையில்)

அட்டவணை இல 4.1 : நிறுவனத்தின் செயலாற்றுகை குறிகாட்டிகள் (2023.12.31 திகதியில்)

விஷேட குறிகாட்டிகள்	உண்மையான வெளியீடு (%) எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக		
	100%- 90%	75% -89%	50%-77%
முன்னேற்றங்கள் மீளாய்வு செய்யப்பட்ட கருத்திட்ட மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	√		
தீர்மானங்களை மேற்கொள்வதற்காக உரியகாலத்தில் வழங்கப்பட்ட கண்காணிப்பு அறிக்கைகளின் எண்ணிக்கை		√	
பிரச்சனைகளை தீர்ப்பதற்காக வெளிநாட்டு நிதியுதவியளிக்கும் நிறுவனங்களுடன் நடாத்தப்பட்ட முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களின் எண்ணிக்கை			√
மேற்கொள்ளப்பட்ட களவிஜயம் மற்றும் அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகளின் எண்ணிக்கையும்			√
தேசிய மதிப்பீட்டு கொள்கை கட்டமைப்பின் உருவாக்கல் மட்டம்.்நிலை	√		
தெரிவு செய்யப்பட்ட கருத்திட்டத்தினை மதிப்பிடும் செயற்பாட்டில் ஈடுபடும் மட்டம்.்நிலை	2024 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட 02 கருத்திட்டங்களின் மதிப்பீட்டிற்குத் தேவையான பூர்வாங்க கலந்துரையாடல்கள் மற்றும் பணிகள் 2023 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டில் மேற்கொள்ளப்பட்டன.		
அலுவலக உத்தியோகத்தர்களின் திறன்கள் மற்றும் நிபுணத்துவத்தை விருத்தி செய்வதற்காக ஈடுபடுத்திய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	√		

அத்தியாயம் 5 - நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான செயலாற்றுகை (SDG)

நிலையான அபிவிருத்தியின் இலக்குகளை அடைந்துக்கொள்வதற்காக அரசாங்கத்தினால் செயற்படுத்தப்படும் அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் எதிர்பார்க்கப்படும் பெறுபேற்றை அடைந்து கொள்தலின் முன்னேற்றங்களை கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல் சம்பந்தமாக திணைக்களத்தினால் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் அட்டவணை இல 5.1 இல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை இல 4.1 : நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைவதற்கான செயலாற்றுகை

இலக்கு/ குறிக்கோள்	இலக்குகள்	வெற்றியின் குறிகாட்டிகள்	தற்போது வரை அடைந்துள்ள வெற்றியின் முன்னேற்றம்		
			0% - 49%	50%- 74%	75%- 100 %
16	16.6 16.7 16.8 16.10	1.இணைய அடிப்படையிலான தேசிய மேம்பாட்டு தகவல் அமைப்பை அணுகும் பங்குதாரர்களின் எண்ணிக்கை	தேசிய அபிவிருத்தி தகவல் அமைப்பு உருவாக்கல் மட்டத்தில் காணப்படுகின்றது.		
		2.இணைய அடிப்படையிலான தேசிய மேம்பாட்டு தகவல் அமைப்பிற்கு பிரவேசிப்பதற்கு ஏற்பட்ட தடங்கள் பற்றிய அறிக்கைகள்			
		3.மதிப்பீட்டு வெளிப்பாடுகளுக்கு எளிதான அணுகல்	√		
		4. இணைய அடிப்படையிலான தேசிய மேம்பாட்டு தகவல்அமைப்புக்கு உரிய நேரத்தில் பிரவேசிப்பதற்கு ஏற்பட்ட தடைகள் பற்றிய அறிக்கைகள்	தகவல் அமைப்பு உருவாக்கல் மட்டத்தில் காணப்படுகின்றது		
		5. அபிவிருத்திப் பங்காளிகளுடன் நடாத்தப்பட்ட ஒருங்கிணைந்த கருத்திட்ட மீளாய்வுகளின் எண்ணிக்கை	√		
		6. அபிவிருத்திப் பங்காளிகளிடம் காணப்படும் தகவல்களுக்கான பிரவேசம்	√		
17	17.8 17.16 17.17	1.அபிவிருத்தி கருத்திட்டங்கள் தொடர்பாக பரிமாற்றப்படும் தகவல்களை பேணுதல்			√
		2. சிறந்த நடைமுறைகள் (கருத்திட்டங்கள்) பற்றிய தகவல்களை பேணுதல்			√

அத்தியாயம் 6– மனித வள விபரக் குறிப்பு

6.1 உத்தியோகத்தர் தொகை தொடர்பான முகாமைத்துவம்

திணைக்களத்தின் ஆளணியினர் தொடர்பான தகவல்கள்

2022.12.31 திகதியில் திணைக்களத்தின் ஆளணி பற்றிய விபரம் பின்வருமாறு காணப்படுகின்றது.

அட்டவணை இல 6.1 : திணைக்களத்தின் ஆளணி பற்றிய விபரம் (2023.12.31 திகதியில்)

ஆளணியினரை வகைப்படுத்துதல்	அங்கீகரிக்கப்பட்ட ஆளணி	காணப்படுகின்ற ஆளணி	வெற்றிடங்கள்
சிரேஸ்ட வகுப்பு உத்தியோகத்தர்கள்	31	19	12
இரண்டாம் நிலை உத்தியோகத்தர்கள்	04	01	03
மூன்றாம் நிலை உத்தியோகத்தர்கள்	46	34	12
ஆரம்ப நிலை உத்தியோகத்தர்கள்	20	15	05
மொத்தம்	**101**	**69**	**32**

6.2 ஆளணி வெற்றிடங்கள்

திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 101 ஆக இருந்த போதிலும் 2022.12.31ம் திகதிக்கு உண்மையான ஆளணியினர் 69 மட்டுமே காணப்பட்டது, அதன்படி காணப்பட்ட வெற்றிடங்கள் 32 ஆகும். சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் பதவியில் வெற்றிடமாகவுள்ள எட்டு பேரில் மூன்று உத்தியோகத்தர்கள் இலங்கை திட்டமிடல் சேவைக்குரியவர்கள் என்பதுடன் அவர்களுள் ஒரு பதவி மேலதிக பணிப்பாளர் நாயகம் குழுவிற்கும் மற்றும் எஞ்சிய இரண்டு வெற்றிடங்களும் பணிப்பாளர் குழுவிற்கும் உரியதாகும். . அதற்கமைய பிரதி/உதவி பணிப்பாளர் வகுப்பிற்குள்ளும் உள்ளடங்குகின்றனர். இப்பதவிகள் 03 வெற்றிடமாகக் காணப்படுவது உள்ளடங்களாக, மற்றைய சேவைகளில் காணப்படும் வெற்றிடங்கள் திணைக்களத்தின் செயற்றிறனை சிறப்பாக பேணுவதில் எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

திணைக்களத்தின் சிரேஸ்ட நிலை மற்றும் இரண்டாம் நிலை ஊழியர் பிரிவின் கீழ் வரும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், 2022/06/22 திகதிய 14/2022 அரச நிர்வாக சுற்றறிக்கைக்கமைய உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் தொழில் புரிவதற்கான சந்தர்ப்பை பெற்றுக்கொண்டுள்ளதனால் உண்மையான பணியாளர்கள் குறைந்துள்ளதனால் திணைக்களத்தின் செயற்பாடுளுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை திட்டமிடல் சேவையின் சிரேஸ்ட வகுப்பு உத்தியோகத்தர்களை தவிர ஏனைய சேவைகளின் சிரேஸ்ட வகுப்பு உத்தியோகத்தர்கள் இத்திணைக்களத்தின் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு செயற்பாடுகளில் ஈடுபடும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

6.3 3 மனித வள அபிவிருத்தி

அட்டவணை இலக்கம் 6.2: உத்தியோகத்தர்களின் பயிற்சி விபரங்கள (2023.12.31 திகதியில்)

நிகழ்ச்சிதிட்டத்தின் பெயர்	பயிற்றப்பட்ட அலுவலகர்களின் எண்ணிக்கை	நிகழ்ச்சி திட்டத்தின் காலம் (நாட்கள்)	மொத்த முதலீடு (ரூ. மில்.)		நிகழ்ச்சி திட்டத்தின் தன்மை (உள்நாடு/வெளி நாடு)	வெளியீடு/ பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு
			உள்நாடு	வெளிநாடு		
ADB: Sub-regional Evaluation Capacity Development Workshop Strengthening Project Performance through Evaluation	02	04	நிதியுதவி நிறுவனத்தால் செலவு தாங்கப்பட்டுள்ளது.		வெளிநாட்டு	ஆசிய அபிவிருத்தி வங்கியின் மதிப்பீட்டு முறைகள் மற்றும் நடைமுறைகள் பற்றிய மதிப்பீட்டுக் எண்ணக்கருக்கள் மற்றும் அனுபவங்களைப் புரிந்துகொள்தல்.
Seminar on PPP Model Development and Management in developing Countries	02	15	நிதியுதவி நிறுவனத்தால் செலவு தாங்கப்பட்டுள்ளது.		வெளிநாட்டு	பொது தனியார் கூட்டாண்மை மாதிரியின் பயன்பாடு பற்றிய அறிவை மேம்படுத்துதல்
2023 Asian Evaluation Week	01	05	நிதியுதவி நிறுவனத்தால் செலவு தாங்கப்பட்டுள்ளது.		வெளிநாட்டு	ஆசியாவில் உள்ள மற்ற நாடுகளில் மதிப்பீடு பற்றிய பயிற்சி மற்றும் அறிவைப் பெறுதல்
ADB: TA 6627 Regional Capacity Building Workshop on Delivering Climate Change Solutions for South Asia Region	01	06	நிதியுதவி நிறுவனத்தால் செலவு தாங்கப்பட்டுள்ளது.		வெளிநாட்டு	காலநிலை மாற்றத்தின் விளைவுகளைத் தணிப்பதற்கான நடவடிக்கைகளை ஆய்வு செய்தல்
ADB: South Asia Regional Training on Economic Analysis of Investment Projects	01	05	நிதியுதவி நிறுவனத்தால் செலவு தாங்கப்பட்டுள்ளது.		வெளிநாட்டு	முதலீட்டு திட்டங்களின் பொருளாதார பகுப்பாய்வு பற்றிய அறிவை மேம்படுத்துதல்

IMF SARTTAC Training Course on Nowcasting	01	14	நிதியுதவி நிறுவனத்தால் செலவு தாங்கப்பட்டுள்ளது.	வெளிநாட்டு	முக்கிய பொருளாதார குறிகாட்டிகளைப் புதுப்பிக்க சமீபத்தில் வெளியிடப்பட்ட தரவைப் பயன்படுத்தும் நடைமுறை
Seminar on China's Foreign Aid Projects of Complete Sets of Equipment-AIBO	02	15	நிதியுதவி நிறுவனத்தால் செலவு தாங்கப்பட்டுள்ளது.	வெளிநாட்டு	சீன உதவி அடிப்படையிலான கருத்திட்ட செயலாக்க நடைமுறை மற்றும் உலகெங்கிலும் செயற்படுத்தப்படும் தற்போதைய கருத்திட்டங்கள் பற்றிய அறிவு.
Advanced Seminar for Financial Leaders from the Perspective of the Belt and Road Initiative	02	10	நிதியுதவி நிறுவனத்தால் செலவு தாங்கப்பட்டுள்ளது.	வெளிநாட்டு	உள்கட்டுப்பாட்டு முறையின் முக்கியத்துவம், வரிவிதிப்பு முறைகளை நாட்டின் அபிவிருத்தி பயன்படுத்திக்கொள்ளக்கூடிய முறைகள் மற்றும் ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக முக்கிய உத்திகள் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்ளுதல்.

அத்தியாயம் 7 - இணக்கப்பாட்டு அறிக்கை

அட்டவணை இலக்கம் 7.1 :இணக்கப்பாட்டு அறிக்கை (2023.12.31 திகதியில்)

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்ற தினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையாது
1	**பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன**			
1.1	வருடாந்த நிதி அறிக்கைகள்	இணக்கமானது		
1.2	அரச அலுவலர்கள் முற்பணக்கணக்கு	இணக்கமானது		
1.3	வணிகமற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள்) வர்த்தக முற்பணக்கணக்குகள்(	-		
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு			
1.5	சிறப்பு முற்பணக் கணக்கு			
1.6	ஏனைய			
2	**புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி.445)**			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.2	ஆள்சார் வேதனாதிகள் பதிவு / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.5	அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.7	பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		

2.8	இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.9	இழப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.10	பொறுப்பு பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.11	அடிக்கட்டை புத்தகங்களின் (GA – N20)பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
03	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி. 135)**			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன	இணக்கமானது		
3.2	நிதி அதிகாரங்கள்பகிரப்படுகின்றமை பற்றி நிறிவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது	இணக்கமானது		
3.3	ஒவ்வொருகொடுக்கள் வாங்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது.	இணக்கமானது		
3.4	2014.05.11திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல .171/2004 இன் படி, அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை.	இணக்கமானது		
4	**வருடாந்த திட்டத்தனைத் தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயற்பாட்டு திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.2	வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.3	வருடாந்த உள்ளகக்கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.4	வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி திணைக்களத்தில் (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
4.5	வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	இணக்கமானது		
5	**கணக்காய்வு வினாக்கள்**			

5.1	அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது	இணக்கமானது		
6	**உள்ளகக் கண்காய்வு**			
6.1	நி .பி.134 (2) டி.எம்.ஏ / 1-2019 படி, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல்.	இணக்கமானது		
6.3	2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40 (4) இன் அடிப்படையில் அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல்.	இணக்கமானது		
6.4	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134 (3) நிதி பிரமானக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல்.	இணக்கமானது		
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	டிஎம்ஏ1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன	இணக்கமானது	நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் நடாத்தப்படுகின்றது.	
8	**ஆதன முகாமைத்துவம்**			
8.1	ஆதனமுகாமைத்துவ சுற்றறிக்கை இல.01/2017, சொத்துபெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.	இணக்கமானது		
8.2	மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்படி, சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதலை ஒருங்கிணைப்பதற்காக ஒருங்கிணைக்கும் உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து அவ் உத்தியோகத்தர் தொடர்பான தகவல்களைஅத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல்	இணக்கமானது		

	அலுவலகத்திற்கு அறிக்கையிடல்.			
8.3	அரச நிதி சுற்றறிக்கை இல.05/2016 இன் படி, பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணக்கமானது		
8.4	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செயற்படுத்தப்படுகின்றமை.	இணக்கமானது		
8.5	நி.பி 772இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது	இணக்கமானது		
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும்.	இணக்கமானது		
9.3	வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல்வேண்டும்	இணக்கமானது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி 103,104,109 மற்றும் 110 இன் படி நட வடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.	இணக்கமானது		
9.5	2016.12.29திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல.2016/30 இன் பத்தி 3.1 இன் விதிகளின்படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல்.	இணக்கமானது		
9.6	குத்தகைக் காலத்தின் பின்னர் குத்தகை வாகனங்களின் பதிவு புத்தகங்களின் பூரண உரிமைமாற்றப்பட்டிருத்தல்.	இணக்கமானது		
10	**வங்கி கணக்குகளின் முகாமை**			
10.1	உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		

10.2	மீளாய்வு வருடத்தில்அல்லது அதற்கு முந்திய வருடங்களிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல்	இணக்கமானது		
10.3	வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல்.	இணக்கமானது		
11	**நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல்.	இணக்கமானது		
11.2	நி.பி .94 (1) இன் படி வழங்கப்பட்ட ஒதுக்கீட்டை பயன்படுத்திய பின் வருட இறுதியில் மிகுதியாகவுள்ள ஒதுக்கீட்டு வரம்பை மீறாதவகையில் பொறுப்புக்களை பேணுதல்.	இணக்கமானது		
12	**அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	இணக்கமானது		
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான கால பகுப்பாய்வு செய்திருத்தல்.	இணக்கமானது		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல்		ஓய்வூதியப் பணிக்கொடையிலிருந்து மீட்டெடுப்பு நடந்து வருகிறது.	
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலம் பிந்திய வைப்புக்கள் சம்பந்தமாக நி.பி 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்.	இணக்கமானது		
13.2	பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
14	**முன்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது	இணக்கமானது		
14.2	நி.பி.371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும்	இணக்கமானது		
14.3	நி.பி.371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல்	இணக்கமானது		
14.4	மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும்	இணக்கமானது		

15	**வருமான கணக்கு**			
15.1	விதிகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும்	பொருத்தமற்றது		
15.2	திரட்டப்பட்ட வருமானம்வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்			
15.3	நி.பி176 இன் படி நிலுவைத் தொகை அறிக்கை கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சமர்ப்பித்தல்			
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல்	இணக்கமானது		
16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல்	இணக்கமானது		
16.3	20.09.2017 தேதியிட்ட எம்.எஸ்.டி சுற்றறிக்கை இல.04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணக்கமானது		
17	**பொதுமக்களுக்கான தகவல் வழங்கல்**			
17.1	தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்து தகவல் வழங்கல் புத்தகமொன்றை பேணுவதுடன் நடாத்திச்செல்லல்	இணக்கமானது		
17.2	அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான நற்சான்றிதழ்/ குற்றச்சாட்டுகளை தெரிவிப்பதற்கு வசதிகளை எளிதாக்குதல்.	இணக்கமானது		
17.3	தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல்.	இணக்கமானது		
18	**பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்**			

18.1	பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல.05/2008 மற்றும் 05/2018 (1) இன் படி பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல்.	இணக்கமானது		
18.2	சுற்றறிக்கையின் பத்தி 2.3 ஐப் பொறுத்தவரை, பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது.	இணக்கமானது		
19	**மனித வள திட்டத்தினைத் தயாரித்தல்**			
19.1	2018.01.24திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல .02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல்.	இணக்கமானது		
19.2	ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஆண்டுக்கு குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி சந்தர்ப்பம் மேற்கூறிய மனிதவள திட்டமிடலினுள் உறுதிசெய்யப்பட்டிருத்தல்	இணக்கமானது		
19.3	மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.	இணக்கமானது		
19.4	மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 வது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தை தயாரித்தல், திறன் மேம்பாட்டுத் திட்டங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் விஷேடதிறன் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை செயற்படுத்தல் தொடர்பாக பொறுப்பை வழங்கி உயர் அதிகாரி ஒருவரை நியமித்தல்.	இணக்கமானது		
20	**கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்**			
20.1	முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பத்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல்	இணக்கமானது		

கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புப் திணைக்களம் - நிறுவன கட்டமைப்பு 2023.12.31

இணைப்பு - 1

